Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.124 of 2020**

Depositions of : PW.5 (LW8)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரவீனா | தொழில் | : | அரசு பள்ளி ஊழியர் |
| தந்தை பெயர் | : | அரிதாஸ் | முகவரி | : | எண்.85, பகத்சிங் குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர், அம்பத்தூர் |
| வயது | : | 43 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

**(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அரசு பள்ளி ஊழியராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் கடந்த 06.07.2019 அன்று இரவு 8.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எனது தெருவில் உள்ளவர்கள் ஓடி வந்து என் கணவருக்கும் பழக்கடை பாலாஜிக்கும் ஒயின் ஷாப்பில் சண்டை நடப்பதாக சொன்னார்கள். நான் கடைக்குள் போன போது வெளியே சுமார் 10 பேர் கத்திகளோடு வெளியே வந்தார்கள் அவர்களோடு பொது மக்களும் வந்தார்கள். எதிரிகள் மணிவண்ணன், அசோக், நெப்போலியன், மரியதாஸ், செந்தில், ரஞ்சித், ராவிட் மற்றும் கோழி குஞ்சு ஆகியோர் காலரை தூக்கி கொண்டே வந்தாரல்கள். என் கணவரை பார்த்த போது வெட்டுக்காயங்களுடன் கீழே**

இறந்து கிடந்தார். என் கணவரை ஆம்புலன்ஸில் ஏற்றிக்கொண்டு போனார்கள். போலிசார் என்னை இரண்டு நாட்கள் கழித்து விசாரித்தனர்.

அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

2019ம் ஆண்டு நான் அம்மா உணவகத்தில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரிதான். அங்கு மாலை நேரத்தில் இரவு 9.00 மணிவரை சப்பாத்தி போடுவார்கள் என்றால் சரிதான். ே உறமா என்பவர் அதன் பொறுப்பாளர் ஆவார். அங்கு 4 பேர் வேலை பார்த்தோம். போலிஸ் விசாரணையில் எதிரிகள் காலரை தூக்கி கொண்டு வந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். என் கணவரை போலிசார் தொடவிடவில்லை. நான் போகும் போது போலிசார் வந்துவிட்டார்கள். நான் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்த்ததாக சொல்வது பொய் என்றும் போலிசார் சொல்லி கொடுத்ததன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,**

**திருவள்ளூர் (இ) பூந்தமல்லி**

**அமர்வு வழக்கு எண்.124 of 2020**

Depositions of : PW.6 (LW9)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாஜி | தொழில் | : | பழக்கடை |
| தந்தை பெயர் | : | சந்தானம் | முகவரி | : | எண்.20, ஸ்டேசன் ரோடு, வரதராஜபுரம், அம்பத்தூர் |
| வயது | : | 38 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

**(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்)**

**முதல் விசாரணை=**

**நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். பழக்கடை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளில் 1 முதல் 7 வரையானோரை தெரியும். 8 வது எதிரியை தெரியாது. இன்றிலிருந்து சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் பழக்கடையில் இருந்த போது போலிசார் வந்து என்னிடம் பஜாரில் ஒரு கொலையாகிவிட்டதாகவும் ஒரு கையொப்பம் போடுமாறும் சொன்னார்கள். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் சம்பவம் தொடர்பாக விசாரிக்கவில்லை.**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=**

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும் அப்போது கடந்த 06.07.2019 அன்று இரவு 8.00 மணிக்கு மேல் எனது நண்பர் அரி ஒயின்ஷாப்பிற்கு மது அருந்த வேணுகோபால் மற்றும் ராஜாவுடன் சென்றார் என்றும், அரி ஒயின்ஷாப்பிற்குள் போனதும், அங்கு சுற்றிக்கொண்டிருந்த கோழி குஞ்சு விஜி அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், இரவு சுமார் 8.30 மணிக்கு அரியை வெட்டி கொலை செய்துவிட்டதாக தகவல் தெரிந்து நானும் ஒயின்ஷாப் பாரினுல் சென்று பார்க்க அங்கு அரி பலத்த வெட்டு காயத்துடன் ரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்ததாகவும், எதிரிகள் அனைவரும் முன் விரோதம் காரணமாக அரியை கொலை செய்துள்ளனர் என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

((Chapter XXIII, Cr.P.C)

2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,

திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.124 of 2020

Depositions of : PW.7 (LW10)

solemnly by Tmt.N.Selvi, Translator

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமமூர்த்தி | தொழில் | : | வாட்டர்வாஷ் கடை |
| தந்தை பெயர் | : | தேவன் | முகவரி | : | எண்.25, திருவள்ளுவர் நகர், அம்பத்தூர் |
| வயது | : | 48 | மாவட்டம் | : | சென்னை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 3rd day of November - 2025.

(எதிரிகள் 1 முதல் 8 ஆஜர்)

முதல் விசாரணை=

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வாட்டர் வாஷ் கடை வைத்திருக்கிறேன். ஆஜர் எதிரிகளில் 1 முதல் 7 வரையானோரை தெரியும். 8 வது எதிரியை தெரியாது. கடந்த 06.07.2019 அன்று O.T. Bus Stand அருகே பேனர் கடையில் இருந்த போது எனது ஊர் காரர்கள் போன் செய்து ஒயின் ஷாப்பில் அரி தாஸை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். நான் வந்து ஒயின்ஷாப்பில் பார்த்தேன். போலிசார் அப்போது ஆம்புலன்ஸில் அரிதாஸை ஏற்றிக்கொண்டு போனார்கள். அவரை யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரிக்கவில்லை. இன்றிலிருந்து சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் பழக்கடையில் இருந்த போது போலிசார் வந்து என்னிடம் பஜாரில் ஒரு கொலையாகிவிட்டதாகவும் ஒரு கையொப்பம் போடுமாறும்

சொன்னார்கள். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் சம்பவம் தொடர்பாக விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத வேண்டி அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை=

போலிசார் என்னை விசாரித்தனர் என்றும் அப்போது கடந்த 06.07.2019 அன்று இரவு 8.00 மணிக்கு மேல் எனது நண்பர் அரி ஒயின்ஷாப்பிற்கு மது அருந்த வேணுகோபால் மற்றும் ராஜாவுடன் சென்றார் என்றும், அரி ஒயின்ஷாப்பிற்குள் போனதும், அங்கு சுற்றிக்கொண்டிருந்த கோழி குஞ்சு விஜி அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், இரவு சுமார் 8.30 மணிக்கு அரியை வெட்டி கொலை செய்துவிட்டதாக தகவல் தெரிந்து கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.